மாகோவில் ரயில் ஊழியர் வேலைநிறுத்தம்!

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 மாசி 23 ரபி-ஆகி 18 இதழ் 25
யாழ்ப்பாண வியாழக்கிழமை 6-3-80

SRI LANKA ... RECEIVED 19-3-80 PERIODICALS DIVISION LIBRARY

மதகுருமாருக்கான

இலவசபிரயாணச் சலுகை வாபஸ்!

அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

மத குருமார்களுக்கு வழங்கப்படவிருந்த இலவசப்போக்குவரத்து வசதிச்சலுகை வாபஸ் பெறப்படும்.

சகல மதங்களையும் சேர்ந்த மதகுருமார்கள் இந்த இலவச பயணச்சலுகையை ஏற்றுக்கொள்ள மறுத்து கட்டணம் செலுத்தியே பிரயாணம் செய்யப்போவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து அரசுஇந்த முடிவை எடுத்துள்ளது.

நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் ராஜாங்க அமைச்சர் மேற்கண்ட தகவல வெளியிட்டார்.

மதகுருமாருக்கு வழங்கப்படவிருந்த இலவச பயணச் சலுகைகள் வாபஸ் பெறுவது தொடர்பாக சகல இ.போ.ச. மத்தியநிலையங்களுக்கும் விரைவில் போக்குவரத்து அமைச்சர் சுற்று நிருபங்களை அனுப்புவாரென்று தெரிகிறது.

மதகுருமார் தமக்குவழங்கப்பட்ட இலவச பயணச்சலுகையைப் பயன்படுத்த விரும்பாததினுல் அதனை ஏற்றுக்கொள்வதெென நேற்றுக்கூடிய அமைச்சரவை முடிவுசெய்ததாகத் தெரிகின்றது.

ஞாயிறு வாகனத்தடை

ஞாயிற்றுக் கிழமைகளில் குறிப்பிட்ட நேரங்களில் தனியார், மற்றும் அரசதுறைவாகனப் பிரயாணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு எதிர்வரும் 23ம் திகதியும், அடுத்தமாதம் 13ம் திகதியும் வாபஸ் பெறப்படும். 23ம்திகதி விக்டோறியா அணைக்கட்டிற்கு அடிக்கல் நாட்டப்படவிருப்பதாலும், அடுத்தமாதம் 13ம் திகதி புதுவருடப்பிறப்பையொட்டியும் இந்த ஏற்பாடு செய்யப்படுகின்றது.

போக்குவரத்து சீர்குலைவு

(கொழும்பு)

மாகோ ரயில் நிலையத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தையடுத்து ரயில் போக்குவரத்து சீர்குலைந்தது.

கொழும்பிலிருந்து யாழ் தேவி நேற்று புறப்படவில்லை. குருநாகல்வரைக்கும் ரயில்கள் சென்றாலும் அங்கிருந்து பிரயாணிகள் பஸ்ஸில் பிரயாணம் செய்தனர்.

தென்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உதவியாளர் ஒருவர் மூன்றும் வகுப்பு பிரயாணத்துக்குரிய பாஸில் 2ம் வகுப்பில் பிரயாணம்செய்தார் என்றும் இதனைக்கண்டு [illegible]பிடித்த ரயில் அவரை மாகோ[illegible] விட்டதாகவும், அதே ரயிலில் பிரயாணம்செய்த சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரயில் காவலருடன் வாக்குவாதப்பட்டு அவர்கள் மீது வசைமாரி பொழிந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதையடுத்து மாகோ ரயில் நிலைய ஊழியர்களும் ஏனைய பிரிவினரும் ரயில்காவலர்களும் முதலில் மெதுவாக வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்து பின்னர் முற்றுகப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டதாக

(8ம் பக்கப் பார்க்க)

யோகேஸ் - தேவா வாக்குவாதம்

(கொழும்பு)

நேற்று பாராளுமன்றத்தில் யாழ்ப்பாணத் தொகுதி உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரனுக்கும் முன்னாள் நீதியமைச்சரும் தற்போதைய உள்நாட்டமைச்சருமான திரு தேவநயாயகத்துக்கு மிடையில் கடும் வர்க்குவாதம் ஏற்பட்டது.

அண்மையில் கிழக்குமாகாணத்துக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள திரு. யோகேஸ்வரன் கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பல குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தார். திரு. தேவநாயகம் தொடர்பாக அவர் குறிப்பிட்ட விஷயங்களுக்கு பதிலளிக்கையில் திரு. தேவநாயகம் கிழக்கு மாகணத்தை குருவழியொன்று தாக்கி அழிவு ஏற்படுத்தியதைக் குறிப்பிட்டுவிட்டு வடபகுதி எம். பிக்கள் இப்பொழுது கிழக்கு மாகா

(8ம் பக்கம் பார்க்க)

டியூட்டரி மாணவி மர்ம மரணம்:

சந்தேகநபர்களுக்கு கோர்ட்டில்

கைவிலங்கு போடப்பட்டது

பலத்தபாதுகாப்புஎடுக்க பருத்தித்துறை நீதவான்உத்தரவு

(புலோலி)

டியூட்டரி மாணவி கமலா மரணம் தொடர்பாகதைதான சந்தேக நபர்களுக்கு உடனடியாக கைவிலங்குபோடுமாறும் அவர்களை பலத்த பாதுகாப்புடனும்கொண்டுசெல்லவேண்டுமென பருத்தித்துறைநீதவான் திரு. கே. எஸ். மகேசன் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில், நேற்றுக்காலை சந்தேக நபர்களான ராஜன், ஜோசப்

]8-ம் பக்கம் பார்க்க]

maxell LN
ULTRA LOW-NOISE
60
maxell LN 60

யப்பானில் தயாரிக்கப்பட்டு தன்னிகரற்று விளங்கும்
கசட் ''மக்சல்'' இன்று உலகில் அதிகம்
விற்பனையாகும் கசட் ''MAXELL''.
''Maxell'' குடும்பத்தின் அங்கத்தவர்கள்

- ★ Maxell LN - C 60, LN - C 90, LN - C 46
- ★ Maxell UD 60, UD 90
- ★ Maxell U DXI ii 60, U DXI ii 90
- ★ Maxell Video Cassette E 120, E 180
- ★ Maxell எலக்ட்ரோனிக் கைக்கடிகார, கமெரா பற்றறிகள்
- ★ Maxell கல்குலேட்டர் பற்றறிகள்
- ★ Maxell Spool tapes - LN, UD, UDXL II and Professional
- ★ Maxell பற்றறிகள் (Penlight, Medium, & Standard)

எல்லா பிரபல விற்பனையாளரிடமும் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக பெற நாடவேண்டிய இடம்;

WILLIAM TRADING Co.,
Hasthigiri Building, 2nd Floor,
124, DAM STREET, COLOMBO - 12.
Telephone: 22475

The
Windmill

Wind is a gift of
nature.
It is free.
Please
use it.



இன்றே பார்வையிடுங்கள்!

காற்றுடி
நீர் இறைக்கும்
இயந்திரம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக ஆதரவில் வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் இம்மாதம் 8-ந் திகதி வரை நடைபெறும் கண்காட்சியில், சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட் விற்பனைநிலையத்தையும்,அதன் அருகில் காற்றுடி நீர்இறைக்கும் இயந்திரம் இயங்குவதையும் பார்வையிடுங்கள்.

காற்றுடி நீர் இறைக்கும்
இயந்திரத்தை
யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக
நாமே நிர்மாணம் செய்து
அமைத்துக் கொடுக்கிறேம்.

HERMES தட்டச்சு
இயந்திரங்கள்

ALOHA-அலோகா
பாதணிகளுக்கு

Estd 1922

சாமுவேல் சன்ஸ் அன் கோ லிமிட்.,
206, 208, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 462

வரி விளம்பரம்

விற்பனைக்கு

கஸல் 72 மொடல் பைசிக்கிள். வாங்க விரும்பும் ஆகக்கூடிய விலை குறிப்பிட்டு 12-3-80-ந் திகதிக்கு முன் எழுதவும். பார்வையிடலாம். மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட், 11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5147

3-3-80 தொடக்கம் 8-3-80 வரை நடைபெறும் யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை பொருட்காட்சி நிலையத்தில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர காட்சிச் சாலையில் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் - யாழ்ப்பாணம். 5144

தவறிவிட்டது

திறப்புக் கோர்வையுடன் கூடிய கறுப்புப் பேர்ஸ் ஒன்று 3-3-80 அன்று 764 இலக்க பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது தவறிவிட்டது. பெற்றுத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்: 428, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 5137

WANTED

Messenger G. C. E. (O/L) with pass in English. Apply before 12-3-80. To:
Me canile Credit Limited,
11/8, Stanley Road, Jaffna.
5146

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

219, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலம் சென்ற வேலுப்பிள்ளை இளையதம்பி திருநாவுக்கரசு என்பவரின் மரணசாதனச் சொத்தின் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

வே. இ. திருநாவுக்கரசு
கைம்பெண் சரோஜினியம்மா 219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

—மனுதார்

மரணசாதன)
நியாயாதிக்கம்) ல. 431

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 11-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்
(ஒப்பம்)
பதிவாளர்.

வை. ச. செந்தில்நாதன்,
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

5142

தவக்கால நற்சிந்தனை

ஆண்டவரே நாங்கள் யாரிடம் செல்வோம்

(அரு. 6-68)

வாழ்வு தரும் உணவுபற்றிய இயேசுவின் போதனை சீடர்கள் பலருக்குக் கடினமாயிருந்தது. எனவே அவரை விட்டுச் சென்றனர். அப்பொழுது இயேசு பன்னிருவரை நோக்கி நீங்கள் போய்விட நினைக்கிறீர்களா? என்று வருத்தத்தோடு கேட்டார். அதற்கு இராயப்பர் அனைவரின் பெயரால் பதிலளித்தார். ''ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம். முடிவில்லா வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.''

இயேசுவே உமது போதனையில் கடினமாக உள்ளதை ஏற்றுக்கொள்ள நான் ஆயத்தமாயிருக்கிறேனா? நோயில், பிணியில், தோல்வியில் இயேசுவை ஏற்றுக்கொள்கிறேனா? அனைத்துச் சூழ்நிலையிலும் உம்மில் நான வைத்துள்ள விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வாழ்ந்து காட்டுகிறேனா?

நான் என்றும் உமது பக்கம் சார்ந்திருக்கிறேனா? உம்மோடு இணைந்து செல்ல ஆயத்தமாய் உள்ளேனா?

ஆண்டவரே உம்மிடமிருந்து நான் பிரிந்து செல்லாதிருப்பேனாக?

—வண மேரி பஸ்ரியன்
அடிகள்

மீன் விற்பனை நிலையம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கம் சீ நோர் ஸ்தாபனத்தின் மீன் விற்பனை நிலையம் ஒன்றை பண்டத்தரிப்பில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காரைநகரிலுள்ள சீ நோர் ஸ்தாபன பொது முகாமையாளரைக் கேட்டுள்ளது. (க)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் மின்சார மூலங்களின் புனரமைப்பு வேலைகளுக்கு 27-03-80-ம் திகதி நண்பகல் 12-00 வணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. குருநகர், மீட்புநில வீதி நெடுக விநியோகக் கம்பிகளை மறுசீரமைத்தல்.
2. மீட்பு நிலப்பகுதியில் தண்ணீர்த் தாங்கி வீதி, மத்தியகிழக்கு வீதிகள் நெடுகவுள்ள ஒரு நிலைமைக் கம்பிகளை முந்நிலைமைக் கம்பிகளாக மாற்றுதல்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப்பணமாக ரூ. 100/-ம் மீளளிக்கப்படாத கேளவிப் பத்திரக் கட்டணமாக ரூபா 30/-ம் செலுத்துவதன்பேரில் 26-03-80-ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற மின்பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்கள் மீது கேள்விகளை இணைப்பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்,

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மின் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி
மன்றம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
03-03-1980.

5143

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: ஈடு 918

1. சின்னப்பு தம்பித்துரை மகள் சிவகுபவதி, திருநெல்வேலி. வழக்காளி.

எதிராக.

1. கார்த்திகேசு குணரத்தினம், ஆலடி ஒழுங்கை, கோண்டாவில். எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 918ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980ம் ஆண்டு பங்குனிமாதம் 28ம் திகதி முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 5820/83 சதம், இன்னும் ரூபாய் 5000 க்கு 9-6-78 தொடக்கம் 23-11-78 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 546/10 சதம். இதில் கோட்டுச் செலவு ரூபாய் 546/ 10 சதம் கட்டப்பட்டது. தீர்வைத் தொகையில் ரூபாய் 3953/90 சதம் கழிக்கப்படும்.

குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை (அ) ''இச்சுலைபுலம்'' நில. பர.90, இதில் சொரியலாய் 1/6 பங்கு. இதே காணி நிந்தப்படுத்தப்பட்டு ''இச்சிலைபுலம்'' நில. பர.12. குளி 9 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்க் கோவிற்பற்று திருநெல்வேலி யிறையில் உள்ள என்று விபரிக்கப்பட்டு டி422/110ல் பதியப்பட்டுள்ளது' இதற்கு வடக்கு மூலையில் உள்ள 12 அடி அகலப்பாதையும் போக்கு வரவு செய்வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது. பகுதி, கோவிற்பற்று இறை ஆகியன பிழையாக விபரிக்கப்பட்டுள்ளது. (ஆ) ''இச்சிலைபுலம்'' நில. பர. 16½, இது அளவின்படி நில பர. 13 குளி 11½, இதில் வடக்கு மூலையாக 12 அடி அகலப்பாதை நிலம் குளி 9. 5ம் கிழக்குப்பக்கமாக நில. பர. 6 குளி 5.50உம் நீக்கி மிகுதியில் தெற்குப்பக்கமாக நில. பர. 6 குளி 5.50. இது வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலியென விபரிக்கப்பட்டு டி 416/6ல் பதியப்பட்டுள்ளது பகுதி கோவிற்பற்று இறை ஆகியன பிழையாக விபரிக்கப்பட்டுள்ளன இவ்விரண்டும் (அ) வும், (ஆ)வும் சேர்ந்து ஒரு முழுக்காணி ''இச்சிலைப் புலம்'' நில பர. 18 குளி 14.50. இது த தேவராசாவினல் 3-5-76ல் அளந்து விபரித்த 1393ம் இலக்கப் படத்தின்படி நில. பர. 17 குளி 14.50. இந்த நிலப்பரப்பு 17 குளி 14.50ல் மேற்குப் பக்கமாக நில. பர. 8 குளி16.25. இது குறித்த படத்தில் துண்டு. 1.இந்த நில.பர. 8 குளி 16.25 செய்பயிர் வான் பயிர்களுக்கும் எல்லை கிழக்கு இக் காணிக்கும் மிகுதி கிழக்கெல்லைக் காணிக்கும் பொதுப் பாவிப்புக்காக விடப்பட்ட 12 அடி அகல ஒழுங்கையும் (துண்டு 3, துண்டு4) விற்பனவுக் காரரரின் மிகுதியாதனம் (துண்டு 2). வடக்கு சிவஞானம் இரத்தினசிங்கமும் பெண் சகுந்தலாதேவியின் ஆதனமும், மேற்கு சண்முகம் இரத்தினசபாபதியும் பங்காளரின் ஆதனம். தெற்கு பொன்னையா பூபாலசிங்கமும் மறுபேரின் ஆதனமும். இதடங்கலும் கிழக்கேயிருக்கும் ரோட்டுக்குப் போக்குவரவு செய்து பாவிப்பதற்கு மிகுதிக் கிழக்கெல்லைக் காரருடன் சேர்ந்து குறித்தபடத்தில் உள்ள 3ம்,4ம், துண்டுகளைப் பாவிக்குமுரித்தும். (முற்பதிவு டி416/8)

ப. நா. தருமலிங்கம்,
கொமிசனரும், ஏல விற்பனையாளரும்,
யாழ். மாவட்ட நீதிமன்றம்.

167/1, கோவில் வீதி,
நல்லூர்,
4- 3- 80

5134

கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

கொழும்பு / யாழ்ப்பாணம்

கோட்டை புகையிரத நிலையம் இரவு 7-00 மணி
வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட், இரவு 7-30 மணி
கே. ஜி. இன்டஸ்ரீஸ்
545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு. இரவு 8-00 மணி

யாழ்ப்பாணம் / கொழும்பு

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி
முன்பதிவு செய்யும் இடங்கள்:
இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் ரோட், கொழும்பு-11.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல்
இரவு 7-00 மணிவரை
பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல்
இரவு 10-00 மணிவரை
காமினி தியேட்டர், மருதானை.
தொலைபேசி: 95810 காலை 9-00 மணிமுதல்
இரவு 10-00 மணிவரை
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல்
இரவு 10-00 மணிவரை

கட்டணம் ரூ. 50/- (ஒரு வழி மட்டும்)

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களில் உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

பிளாஸா தியேட்டர், வெள்ளவத்தை.
(ரூ 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்)
கே. ஜி. இன்டஸ்ரீஸ்,
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
(ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்)

5133

இனந்தெரியாத சடலம்

(மாவிட்டபுரம்)

''வளலாய் கடற்கரையில் ஒதுங்கிய இனந்தெரியாத ஆணின் சடலம் எவரும் அடையாளம் காட்டி உரிமைகோராமையால் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

வளலாய் கடற்கரையில் சடலம் ஒன்று கிடப்பதாக கிடைத்த தகவலையடுத்து காங்கேசன்துறைப் பொலிசார் மரணவிசாரணைக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. உலகநாதன் விசாரணை நடத்தினர்.

பிரேத பரிசோதனை செய்த தெல்லிப்பழை அற்சினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி நீரில் மூச்சுத்திணறி மரணம் சம்பவித்ததாகக் கூறினர்.

சடலத்தை எவரும் அடையாளம் காட்டி உரிமை கோராமையால் சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

நீதி நிர்வாகச் சட்டம்

1973-ம் ஆண்டு இல. 44 233-ம் பிரிவின் கீழ் பரிபாலன அதிகாரம் வழங்குவதற்கான இடைக்காலக் கட்டளை

ஸ்ரீ இலங்கா குடியரசின் நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்,
வலையம்: யாழ்ப்பாணம்.
இல. 348

கரணவாய் தெற்கைச் சேர்ந்த உயிலேதும் எழுதாது காலஞ்சென்ற கந்தையா குலசேகரம் பெண் தவமணி என்பவரின் ஆஸ்திகள், சொத்துக்கள் விடயம் சம்பந்தமாக.

காலஞ்சென்றவர்
சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

மனுதார்

1. மயில்வாகனம் கந்தையா கைம்பெண் இராசம்மா.
2. கந்தையா குலசேகரம் கரணவாய் தெற்கு, கரவெட்டி.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்துட்படவிருக்கும் புறபேற் தத்துவ அதிகாரியான க. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயல்பட்டு 281-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 11-4-1977ம் திகதி கொண்ட மனுவில் சொல்லப்பட்ட விடயங்கள் யாவும் முதல் கட்டத்திலேயே நிரூபிக்கப்பட்டதாக திருப்தியடைந்து பின்வருமாறு கட்டளையிடப்படுவதாவது

மேற் சொல்லப்பட்ட மனுதார் மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் அடுத்த உரித்துச் சொந்தக்காரர் என்ற வகையில் காலஞ் சென்றவரின் சாதனமேதும் எழுதாது விட்டிறந்த ஆதனங்களுக்கு இத்தால் பரிபாலன அதிகாரம் வழங்கப்படுகிறதற்கு மாறான காரணம் ஏதும் இருப்பின் இக்கட்டளை பெறுபவரோ அல்லது வேறு யாரேனும் இருப்பின் தமது காரணத்தை இந் நீதிமன்றின் திருப்திக்கமைய 1977-ம் ஆண்டு ஆடி மாதம் 8-ம்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எடுத்துக் கூறுமாறு இத்தால் கட்டளையிடப்படுகிறது.

1979-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ம் திகதி.

(ஒப்பம்)

கே. கணபதிப்பிள்ளை
தத்துவ அதிகாரி

காரணம் காட்டுவதற்கு மீள வழங்கும் திகதி 7-3-1980 வரைவு
(ஒப்பம்) ம. வேலும்மயிலு
சட்டத்தரணி.

5110

மணிவாக்கு

உன்னுடைய சட்டைப்பைக்குள்ளே ஒரு பைசா இருக்கிறது. எங்கிருந்து எப்படி அப்பைசா அங்கே வந்தது? என்று கேட்டுப்பார். நீ காணும் வரலாற்றிலிருந்து நீ அதிகம் படித்துக்கொள்வாய்.

—மகாத்மாகாந்தி

மக்கள் கருத்து

அத்துளு குடிநீர்த் திட்டம்

கரவெட்டி அத்துளு குடிநீர் திட்டத்தில் கடந்த சில மாதங்களாகத் தண்ணீர் விநியோகம் சீர்குலைந்துள்ளது. நேரத்திற்குத் தண்ணீர் திறப்பதும் பூட்டுவதும் சிற்றூழியர்களின் வசதிக்கேற்பச் செய்வதுபோல் தெரிகிறது. அதாவது ஒரு குறித்த நேரத்தில் திறந்து, குறித்த நேரத்தில் பூட்டுவதில்லை. இதுபற்றி அவர்களிடம் விசாரித்தபோது, இயந்திரம் ஒன்றுதான் வேலை செய்கிறது என்றார்கள். பின்பு ஒரு நாள் தற்காலிகமாக வேலை செய்பவர் இல்லாதபடியால் நிரந்தரமாக வேலை செய்பவரும் வரவில்லையென்றார்கள். இன்னொரு நாள் மேலதிகநேர வேலைப் பணத்தை நிற்பாட்டியதால் உரியவர் வேலைக்கு வரவில்லை என்றார்கள். திரும்ப ஒரு நாள் மின்சாரம் இல்லாததால் தண்ணீர் இறைக்கமுடியாதென்றார்கள். வேறொரு நாள் விசாரணையின்போது, மின்சாரம் 'சிங்கிள் பேசில்' வேலை செய்கிறது; அதனால் பட்டினசபை இப்படியான வேலைகளைச் செய்யக்கூடாதென்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றது'' என்றார்கள் இவர்கள் நடத்தையைப் பார்க்கும்போது வேடிக்கையாயிருக்கிறதுஇவர்கள் தங்கள் கடமை என்ன என்பதைப்பற்றி உணருவதாகத் தெரியவில்லை.

ஆகையால் உரிய அதிகாரிகள் ஆவன செய்து ஒரு ஒழுங்கான முறையில் நீர் விநியோகம் நடைபெறுவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா?

சி. கந்தசாமி

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

°° °° °°

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி

''யாழ்ப்பாணம் சென்று வந்தேன்; ஆறு குளம் எல்லாம் மூழ்கிவந்தேன்'' என யாழ். வரும் பிரயாணிகள் பாட்டுப் பாடும் அளவுக்கு குண்டும் குழியுமாகக் காட்சியளித்த பஸ் நிலையம் முன்பாக உள்ள ஆஸ்பத்திரி வீதி திருத்தப்படத் தொடங்கியதும் மகிழாத நெஞ்சமில்லை.

ஆனால் திருத்துகிறார்கள், திருத்துகிறார்கள், திருத்திக்கொண்டே இருக்கிறார்கள். நாட்கள்தான் நகர்கிறதே தவிர, வேலை ஆமைவேகத்தில் அசைகிறது. இதனால் மலைமேல் நடப்பதுபோல் பொதுமக்கள் கல்லுக்கும்பலுக்கு மேலால் நடந்து கால்களைப் புண்ணாக்குகின்றார்கள். வீதி திருத்தப்படவில்லை என மனம் புண்ணாகியிருந்த மக்கள், உடல் புண்ணாகை பலத்த சிரமத்துடன் நடை பழகுவதைப் பார்க்க வேதனையாக உள்ளது.

யாழ். நகரின் முக்கிய போக்குவரத்து வீதியைத் திருத்த இவ்வளவு நாளா? என விஷயமறிந்தவர்கள் திகைக்கிறார்கள். கொழும்பில் பத்து மணித்தியாலத்தில் முக்கிய வீதிகள் பழுது பார்க்கப்படும் அதே வேளை, யாழ். நகரில்...... சம்பந்தப்பட்டவர்கள்தான் புண்ணாகும் கால்களுக்கு ஆறுதல் கூறமுடியும்.

நடராஜா

யாழ்ப்பாணம்.

"இந்நாட்டில் இடம்பெற்ற

இனக்கலவரங்களுக்குக் காரணம் முதலாளித்துவ வர்க்கமே

சிங்களமக்கள் அல்ல'' என்கிறார்

தொழிற்சங்கப் பிரமுகர்

(யாழ்ப்பாணம்)

''இந்நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களுக்கும் இரத்தக்களரிகளுக்கும் சிங்கள மக்களோ இடது சாரிகளோ பொறுப்பாளிகளல்ல. காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த முதலாளித்துவ வாதிகளே இனக்கலவரங்களைத் தூண்டி விட்டதுடன் பல வழிகளிலும் தமிழ்மக்களை நசுக்க முற்பட்டவர்கள். முதலாளித்துவ சக்திகள் செய்த தவறுக்கு நாம் எவ்வகையிலும் பொறுப்பானவர்கள் அல்ல.

வடபிரதேச தொழிற்சங்க நடவடிக்கைக் குழுவினால் யாழ் றிம்பர் மண்டபத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பேசிய அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தலைவரும் நவலங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த வருமான திரு. ஜீ. டி. சவுனதாசா மேற்கண்டவாறு கூறினார்.

வடபிரதேச தொழிற்சங்கக் குழு அழைப்பாளர் திரு.எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சவனதாசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

இனரீதியான போராட்டம் வெல்லாது

''இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ்மக்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் முதலில் இனரீதியான போராட்டத்தில் ஈடுபடாது வர்க்கரீதியிலான போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

''தமிழ்மக்களின் தலைவிதியைத் தமிழ்மக்களே நிர்ணயிக்கக்கூடிய சுய நிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென நாம் வற்புறுத்திவருகின்றோம்

அதனால் தான் இந்தநாட்டு தொழிலாளவர்ப்புத்தினதும் பாட்டாளி வர்க்கத்தினதும் தமிழ்மக்களினதும் பிரச்னைகளை முன் வைத்து எதிர் வரும் 8-ம், 9-ம் திகதிகளில் சுகததாசா விளையாட்டரங்கில் தொழிற்கங்கங்களின் தேசிய மகாநாடு நடைபெறவுள்ளது.

அரசாங்க படைப்பலத்தை விட தொழிலாள வர்க்கத்தின் சக்தி பெரியது.

''அரசஊழியர்களின் லீவுகளைக் குறைக்க வேண்டும். என்று கூறிய ஜனாதிபதி நாம் நடாத்திய மாபெரும் போராட்டத்தை அடுத்து லீவை குறைப்பதில்லை என்ற எண்ணத்துக்கு வந்துள்ளார்.

செந்தூர்ராசா பேசுகையில் கூறியதாவது

தனித்தமிழ்நாடு பிரச்னை எப்படி வந்தது

கடந்த காலத்தில் தொழிலாளவர்க்கத்தின் தலைவர்கள் எனக்கூறிக் கொண்டவர்கள் தமிழ்மக்களின் பொதுப் பிரச்னையில் தலையிடத்தவறி விட்டனர். அவர்கள் கடந்த காலத்தில் மக்களுக்குச் செய்ய வேண்டியதை செய்யத்தவறியதனால் தான் 'தனித் தமிழ் நாடு' என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

இப்போதுதான் சிந்திக்கின்றனர்

''வெளிநாடுகளுக்கு எமது பிரச்னை தெரிய வந்ததன் பின்தான் தென் இலங்கைத் தொழிற்சங்கத் தலைவர்கள் எம்மைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

''1956-ம் ஆண்டுக்கு முன்பே நாம் விழிப்படைந்திருந்தால் நாம் இன்று இவ்வளவு தூரம் பாதிப்படைந்திருக்க மாட்டோம்.

குரல்கொடுக்கத் தவறிவிட்டனர்

அரசு தமிழ்மக்களுக்கு எதிராகச் செய்யும் பொய்ப் பிரசாரத்திற்கு எதிராக தென் இலங்கையிலுள்ள இடது சாரித்தலைவர்கள் குரல் கொடுக்கத்தவறி விட்டனர். இதை கடந்த கால சம்பவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன.

இடது சாரிகள் ஏற்க வேண்டும்

தமிழ்மக்களுக்குள்ள பிரச்சனைகளைத் தென்னிலங்கையிலுள்ள இடது சாரிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேசிய ஒற்றுமைக்கு இது வழியல்ல

''வென்னப்புவவில் உள்ள ஒருசிலரை யாழ்ப்பாணம் கொண்டுவருவதாலோ, இங்குள்ள ஒருசிலரை மகாவலிக்குக் கொண்டுபோவதாலோ தேசிய ஒற்றுமையை ஏற்படுத்திவிடமுடியாது.

''யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ முகாமை உடன் எடுக்கவேண்டுமென திரு.வாசுதேவா தென்னிலங்கையில் ஒரு போராட்டத்தை நடத்தினார். அதுபோன்று தென்னிலங்கை இடதுசாரிகள் எல்லோரும் போராட்டம் நடத்தியிருந்தால் 77ம் ஆண்டு தமிழ்மக்கள் இவ்வளவு தூரம் பாதிக்கப் பட்டிருக்கமாட்டார்கள்.

''இடதுசாரித் தலைவர்கள் ஆட்சிநடத்திய காலத்திலும் கூடத் தமிழ்மக்களின் பிரச்னைக்குத் தீர்வுகாணத் தவறிவிட்டனர். தென்னிலங்கை இடதுசாரிகள் உண்மையில் சோஷலிஸ ஆட்சி மலருவதை விரும்வார்களேயானால்முதலில் எமது தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்கவேண்டும்.''

தேசிய எழுதுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்த திரு. மெற்றாஸ்மயில் பேசுகையில் கூறியதாவது: ''சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்காது அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கொள்கைக்குச் சாதகமாக நின்று, வேலையிழந்த 23 விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்கள் போன்ற தமிழ்த் தொழிலாளர்கள் விமோசனம் பெறமுடியாத, கோரிக்கை இல்லாத தேசியப் போராட்டம் தமிழ்த் தொழிலாளருக்கு அர்த்தமற்றது.

''சமர்ப்பிக்கப்பட்ட 23 கோரிக்கைகளிலும் வெற்றி பெற்றால் இந்நாட்டில் வாழும் தொழிலாளி வர்க்கம் சம்பள உயர்ச்சி, வேலைநேர அதிகரிப்பு மற்றும் தொழில் உரிமைகளைப் பெறலாம். இவைகள் சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலையிழந்த தமிழ்த் தொழிலாளருக்குக் கிடைக்காது.

''1956ம் ஆண்டுக்கு முன்பு [illegible] தொழிலாளி வர்க்கள் வெற்றி பெற, இன, மொழி வேறுபாடில்லாத தொழிலாளி வர்க்கம் இருந்ததே காரணமாகும். ஆனால் 1956க்குப் பின் சிங்களம் மட்டும் வந்தபின் தமிழ்த் தொழிலாளரைப் பாதிக்கக் கூடிய சட்டமாக இருந்ததால் சிங்களம் பேசும் தொழிலாளர்கள் பேசாமடந்தையாக இருந்தார்கள். இதனால் மொழி ரீதியில் தொழிலாளிவர்க்கம் பிரிக்கப்பட்டது. அத்துடன் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபடுவோமென்று கூறிய தொழிலாளர் தலைவர்கள், தொழிலாளருக்கு எதிரான சட்டத்தை இயற்றியும், தொழிலாளர் இயக்கங்களையும் முறியடித்தனர். இதனால் இந்நாட்டில் இடதுசாரி அரசியல் தலைவர்களின் பின்னணி, இந்நாட்டின் தொழிலாளருக்கு விமோசனம் தராதென்பதை எடுத்துக்காட்டுகிறது.

"அரசியல் இயக்கத்துடன் ஏன் சேர்ந்தோம்''

மெற்றஸ் மயில் விளக்கம்

''எமது தொழிற்சங்கப் போராட்டத்திற்குப் பெரும்பான்மைத் தொழிலாளரின் ஆதரவு கிடையாததினால் இன விடுதலை பெற்றுத்தான் தமிழ்த் தொழிலாளர்கள் உரிமைபெற முடியுமென்றே நாம் அரசியல் இயக்கத்துடன் சேர்ந்து சில பாதிப்புக்களை வென்றெடுப்பதுடன் எம்மைச் சார்ந்த அரசியல் இயக்கத்திற்கு ஆதரவு வழங்குகிறோம்.''

திரு. விஜயானந்தன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

8 றாத்தல் தானியம் தருகிறோம் என்றனர்

''ஆட்சிக்கு வந்ததும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து முதலாளி வர்க்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் ஆதரவாக இன்றைய அரசு ஆட்சி நடத்துகிறது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் மக்கள் என்றுமே அனுபவித்தறியாத பல தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளனர். 8 றாத்தல் தானியம் தருவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று எல்லாப் பொருட்களின் விலையையும் உயர்த்தி ஏழைகள், பாட்டாளி வர்க்கத்தைப் படுகுழியில் தள்ளிவருகின்றனர்.''

"அடுத்த தேர்தல்வரை சும்மா இருந்தால் செத்துவிடுவோம்''

-- அமரதாசா

பொதுத் தொழிலாளர் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. அமரதாசா பேசுகையில் கூறியதாவது:

மாட்டுவண்டியில் பாராளுமன்றம் வந்த ஜே. ஆர்,

''சுதந்திரக்கட்சி ஆட்சியில் எண்ணை விலை ஏற்றப்பட்டபோது மாட்டுவண்டியில் பாராளுமன்றம் வந்தவர் ஜே. ஆர். விலைவாசி உயர்த்தப்பட்டபோது அதை எதிர்த்த ஜே. ஆர். ஆட்சியமைத்த பின் விலைவாசி உயர்வு, எண்ணை விலை உயர்வு, ஏழை மக்களின் உணவு மானிய வெட்டு ஆகியவற்றைக் கொண்டுவந்தார்.

''பொருட்கள் பெருந்தொகையாக இறக்குமதிசெய்யப் பட்டுள்ளன ஏழைமக்களால் இப்பொருட்களைப் பார்க்கத்தான்முடியுமே தவிர அந்தப் பொருட்களை வாங்க மக்களிடம் வழியில்லை அபிவிருத்திக்குப் பணம் செலவிடப்போகிறோமெனக் கூறி மானியங்களை வெட்டினார்கள். அபிவிருத்திக்குப் பதிலாக ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதிசெய்யப்படுகின்றன.

83-ம் ஆண்டு தேர்தல் வரும் வரை நாம்பார்த்துக்கொண்டு சும்மா இருப்போமேயானால் நாம் எல்லோரும் அதற்குமுன் வாழ வழியின்றி மடிந்துவிடுவோம். ஆனபடியால் 83 ம் ஆண்டு வரும் வரை பார்த்துக்கொண்டிராது அதற்கு முன் எமது அரசு எதிர்ப்பை எந்தெந்த வழிகளில் நடாத்த முடியுமோ அந்தந்த வழிகளில் நடாத்தவேண்டும்.

ஜனாப் இக்பால் பேசுகையில் கூறியதாவது:

''தொழிலாளசக்தியின் ஒற்றுமை எதிர்காலத்தில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திவிடும். ஈரானில் நடைபெற்றது போன்ற ஒரு மாபெரும் புரட்சி இங்கும் ஏற்படத்தான் போகிறது. அப்போது ஜனாதிபதியும் அவரது அரசும் தூக்கி எறியப் படப்போகிறது.

''1953ம் ஆண்டு நடைபெற்றபோராட்டம் ஏற்படத்தான் போகிறது. மக்களின் எழுச்சியை யாராலும் அடக்கிவிடமுடியாது''

(கொ-அ)

தமிழ்நாடு சுவாமிகள் விஜயம்

(பண்டத்தரிப்பு)

தமிழ் நாட்டிலுள்ள கோட்டார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த சுவாமி வல்தாரிஸ் அவர்களும், அவரின் குழுவைச் சேர்ந்த பன்னிரண்டு பேரும் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் பொருட்டு வருகை தரவுள்ளனர். யாழ். மறைக்கல்வி நடு நிலையம், பண்டத்தரிப்பு தியான இல்லம் ஆகிய இடங்களில் நடைபெறும் கருத்தரங்குகளில் சிவாமி வல்தாரிஸ் அவர்களும் அவரது குழுவினரும் பரிசுத்த ஆவியில் வாழ்வு, விசுவாசப் புரட்சி ஆகிய விடயங்கள் பற்றி உரையாற்றுவார்கள்.

பண்டத்தரிப்பு தியான இல்லத்தை சூழவுள்ள நான்கு பங்குகளில் இம்மாதம் 11ம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரை இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. (ஈ)

நினைத்தாலே இனிக்கும் பொருட்காட்சி

மறுபிறப்பிலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள் இந்துக்கள்

சொர்க்கமும் நரகமும் ஆண்டவனால் படைக்கப்பட்டதென்ற தேவவாக்கை அனுசரித்து வாழ்பவர்கள் கத்தோலிக்கர்.

இப்பிறப்பிலே கெட்டசெயல்களைச் செய்யக்கூடாது என சிந்தித்து வாழ்பவர்கள் இஸ்லாமியர்

எம்மதத்தவர்களும் பிறப்பிலே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இறைவனால் நமக்குக் கிடைப்பதுதான் மனித பிறவி என்று நம்புகிறார்கள்.

ஆனால் மனித பிறப்பு எவ்வளவு விசித்திரமானது.

இந்த விசித்திரத்தின் ஓர் அங்கத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும் 'வளர்ச்சிகாண் தொழில்நுட்பப் பொருட்காட்சி'யில் காணக்கூடியதாகவிருக்கிறது.

யாழ்ப்பாணக்கல்லூரிமாணவர்கள் மனிதபிறப்பின் விசித்திரத்தை ஒவ்வொரு மாதமாக கருப்பையிலிருந்து எடுத்து 'போர்மலினி'ல்வைத்துபொது மக்களின் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். இந்த அதிசயத்தைக் காணுகின்றபோது எம்மையெல்லாம் தடுமாற வைக்கிறது மற்றுமொரு அதிசயம்.

ஒருதாயின் வயிற்றில் உருவான நான்கு குறைமாதச் சிசுக்கள்—பத்திரிகையில் படிக்கும்போது அதிசயிக்கக்கூடிய செய்தி — நான்கு குழந்தைகளும்ஒருகண்ணாடிப்பேழையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

அந்தச் சிசுக்களின் தாயாரைத் தெரியுமா? தாயார் உயிருடன் இருக்கிறாரா? இப்படியாக பலரும் பலவாறு கேள்வி எழுப்புவது அந்தநேரத்தில் பரிதாப உணர்வைஏற்படுத்துகிறது.

"திருமணமாகி சிலவருடங்களாகின்றன. குழந்தைகள் இல்லையா" எனபெரியவர்ஒருவர் கேட்டபொழுது, அந்த இளம் கணவன் "மனைவிக்கு கருப்பையில் புற்றுநோய். எமக்கு குழந்தையே பிறக்காது" என்று என்றோ ஒருவர் கூறியது ஞாபகத்திற்கு வருகிறது. புற்றுநோய்க்கு இலக்கான கருப்பை ஒன்று அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தபோதே, அந்த ஞாபகம் எழுந்தது.

-- சச்சி --

விளக்கமளித்துக் கொண்டிருக்கும் மாணவர் மருத்துவத்தால் இதனைக் குணப்படுத்தலாம் என்றார். மருத்துவர்கள் இதுவரை இந்நோயைக் குணப்படுத்தவில்லையே ஒரு குடும்பஸ்தர் பெருமூச்சுடன் முணுமுணுப்பதையும் அங்கு கேட்கக்கூடியதாக இருந்தது.

மாணவிகள் அவற்றுக்கு பதட்டமோ கூச்சமோ இன்றி விளக்கம் அளிக்கிறார்கள்.

அவர்களின் விஞ்ஞான அறிவு விளக்கங்களில் தொனிக்கிறது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உயிரியல் பகுதி நுழைவாயிலைச் சென்றடைந்தபோது 'பயனற்றவை கூடப் பயனுள்ளதாகலாம்' என்ற பெயர்ப் பலகை எம்மைச் சிந்திக்கவைக்கிறது.

உள்ளே செல்கிறோம். அங்குள்ள சகலதும் பயனுள்ளதாகத் தெரிகிறது.

அலரிவிதையிலிருந்து பெறப்படும் எண்ணெய் எரிபொருளாகப் பயன்படுகிறது.

நிலக்கடலை எண்ணெய் பயனுள்ளதாகிறது.

எருக்கலை நார் தூரிகையாக மாறுகிறது.

தேயிலை, பீற்றூட், செவ்வந்தி ஆடைகளுக்கு இயற்கைச் சாயமூட்டுகிறது.

மல்லிகைத் தோட்டத்தால் பல்லாயிரம் ரூபாய்களைச் சம்பாதிக்கலாம் என்கிறார் ஒருவர். இயற்கையாகக் கிடைக்கும் தூதுவளை, வல்லாரை, ப்சளி, முல்லை, போன்றவற்றில் சுவையான சமையல் பண்டங்கள் செலவின்றித் தயாரிக்கலாமெனச் சிரித்த முகத்துடன் விளக்கம் தருகிறார் ஒரு மாணவி. இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு செல்கையில் யாழ்ப்பாணக்கல்லூரித் தமிழ் மாணவர் மன்றம் எம்மை அழைக்கிறது.

அவர்களது காட்சிச்சாலை விசித்திரமானது. இளஞ் சமுகத்தினரை அரசியலுக்கு அழைப்பது போலிருந்தாலும் உண்மையில் பயனுள்ளதாய் இருக்கிறது.

மாணவர்களின் பௌதீகப் பிரிவுக்குச் சென்றாலும் அங்கு விஞ்ஞானம் கொஞ்சி விளையாடுகிறது.

பீறிட்டுப் பாயும் நீரின் மேல் சிறிய பந்து விளையாடுகிறது. தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையமொன்றை மாணவர்கள் இயக்குகிறார்கள்.

இவ்வாறு மாணவர்களின் திறமை பல இடங்களில் பளிச்சிடுகிறது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முழுப் பங்களிப்பையும் இங்கு காணலாமென்று எதிர்பார்த்தவர்களுக்கு வெறும் ஏமாற்றமே மிச்சம்.

வட்டு. எம். பி. கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிதிநிலைமையைப் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள தந்தியொன்றில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கேட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக இச்சங்கத்தில் நிலவிவந்ததாகக் கூறப்படும் முறையீனங்கள் பற்றியும் உடன் விசாரணை நடாத்துமாறும் அவர் மேற்படி தந்தியில் கேட்டுள்ளார்.

இத்தந்தியின் பிரதிகள் யாழ். மாவட்ட அமைச்சர், யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (சு)

கொற்றாவத்தைக் கிராமத்தின் இழப்பு

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கொற்றாவத்தைக் கிராமம் அதன் பெருமை மிக்க வழிகாட்டியைச் சில தினங்களுக்கு முன்னர் இழந்தது.

திரு. வயிரவநாதர் இளைய தம்பி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கொற்றாவத்தையின் வளர்ச்சியில் ஒரு தந்தையின் பாசத்துடன் அக்கறை காட்டி வந்துள்ளார். இதனாலேயே இக்கிராம மக்கள் அன்னார் மீது அளப்பரிய பாசமும் மதிப்பும் வைத்திருந்தார்களெனில் மிகையாகாது.

தமது இளமைப் பருவத்திலேயே புத்திக்கூர்மையுடன் விளங்கிய அமரர் இளையதம்பி தமது கல்வியைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பெற்றார் தமது இருபதாவது வயதில் பெரும்பாலான யாழ்ப்பாணத் தமிழர்களைப்போல் மலேயாவுக்குச் சென்று அங்கு நில அளவைத் திணைக்களத்தில் பணிஆற்றலானார். அங்கு பணியாற்றுகையில் உயரதிகாரிகளினதும் பொது மக்களினதும் மதிப்பைத் தேடிக்கொண்டார்.

1948-ல் ஈழம்திரும்பிய அவர் கொற்றாவத்தையின் வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தலானார். கொற்றாவத்தைக்கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக இருந்து பெரும்பணி புரிந்தார். கிராமத்தில் நடக்கும் வைபவங்களைத் தாமே முன்னின்று நடாத்தியதுடன் பொருளுதவியும் புரிந்தார்.

தமிழரசுக்கட்சியின் பழம்பெரும் தொண்டரான அமரர் இளையதம்பி தமிழர் கூட்டணியின் வெற்றிக்காக அயராது உழைத்து வந்துள்ளார். சிறந்த முருக பக்தரான இவர் மாசி மகாமகத்திருநாளன்று உயிர் நீத்தமை குறிப்பிடத்தக்கது. அன்னாரது உயிர் சாந்தி பெறுவதாக.

—பொ. கிருபானந்தன்

அருட்தந்தை ஞானபண்டிதன்

அன்பினுக் கோர் உருவம்
ஆக்கவே நினைந்து தேவன்
பண்பினால்அனுப்பிவைத்தான்
எம்பிரான் இயேசு நாதன்
இணைஅடி பணிந்த ஞான
பண்டிதா என்றும் உன்னை
பாசமாய் நினைந்தோம் ஐயா.

—எஸ். [illegible] பிள்ளை

திருநெல்வேலியில் பால் சேகரிப்பு பண்ணை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி குடியேற்றத் திட்டத்தில் பால் சேகரிப்புப் பண்ணைக்கான அடிக்கல்லை யாழ் அரசாங்கஅதிபரும் யாழ் மாவட்டச் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நாட்டிவைத்தார்.

இவ்வைபவத்தில் யாழ் மேலதிக அரசாங்க அதிபர்களான திருவாளர்கள் எம். பஞ்சலிங்கம். என். பி. ஜெகநாதன், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சபாபதிப்பிள்ளை, யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ். சிவசு[illegible] திட்டமிடல் அதிகாரி திரு கே. புலனேந்திரன், யாழ். மாவட்டக் காணி அதிகாரி திரு. எஸ். சம்பந்தன், மற்றும். உயர் அதிகாரிகளும், பொது மக்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

மேற்படி குடியேற்றத் திட்டத்தில் உள்ள ஒன்றரை ஏக்கர் காணியில் இத்திட்டத்திற்கான கட்டடங்கள் அமைக்கப்படும். இத்திட்டம் மேலும் பல ஏக்கர் காணியில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இத்திட்டத்திற்கு [illegible]0 உயர்ரக மாடுகளை வழங்க முன்வந்துள்ளார்.

பால் சேகரிப்பு நிலையம், பால் குளிரூட்டும் நிலையம், கால்நடை உணவு நிலையம், பசுமாடு பராமரிப்புப் பகுதி ஆகியன இத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

இப்பகுதியில் பால் சேகரித்து விநியோகிப்பதற்குவசதியாக இப்பண்ணைக்கு சிறந்த முறையில் வீதியொன்று அமைக்க கடந்த வாரம் மாவட்ட அமைச்சின் செயலாளர் தலைமையில் கூடிய கூட்டத்தில் பெருந்தெருக்கள் பிரதம நிறைவேற்றுப் பொறியியலாளர் இசைந்துள்ளார்.

எண்ணாயிரம் பைந்து பால் சேகரிப்பதற்கேற்றமுறையில் இப்பால் சேகரிப்பு நிலையம் அமையும். மே மாதத்தில் முடிவடையவிருக்கும் இத்துரித திட்டம் வெகுவேகமாக நடைபெற்றுவரும் யாழ்ப்பாண அபிவிருத்திக்கு உதாரணமாக விளங்குகிறது. அத்தோடு சிறந்த இன பால் மாடுகளையும் இந்தப்பண்ணை மூலம் மக்கள் விலைக்கும்பெற முடியும். (சொ-[illegible])

"அல்வாயில் போத்தல்கள் தொழிற்சாலை

(நெல்லியடி)

பனம் பொருள் அபிவிருத்திச் சபை, உடுப்பிட்டி தேர்தல் தொகுதியைச் சேர்ந்த அல்வாய் பகுதியில் போத்தலில் கள்ளை அடைக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவவுள்ளது.

இத்தொழிற்சாலையை நிறுவ சுமார் இரண்டு லட்சம் ரூபாவை, பனம் பொருள் அபிவிருத்திச்சபை தனது சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளதாக மேற்படி சபையின் தலைவரான திரு. திரு.என். கனகசூரியர் தெரிவித்துள்ளார்.

அல்வாய்ப் பகுதியில் அதிகமான பனைமரங்களும், சீவல் தொழிலாளர்களும் வாழ்வதனால் இப்பகுதியே இத்தொழிற்சாலை நிறுவுவதற்குரிய சிறந்த இடமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஈ)

மொறீஸியஸில்

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 2வது மாநாடு

(போர்ட் லூயிஸ்)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இரண்டாவது மாநாடு மொறிசியஸ் நாட்டின் தலைநகரான போர்ட் லூயிஸில் உள்ள மகாத்மா காந்தி நினைவுமண்டபத்தில் சிறப்பாக நடைபெறவிருக்கிறது

இம்மாநாடு ஆவணி மாதம் 4ந் திகதி முதல் 8ந் திகதி வரை 5 தினங்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டிற்கு மொறிசியஸ் பிரதம மந்திரி சேர் சிவசாகர் ராம்குலாம், நிதியமைச்சர் திரு. வீராசாமி ரெங்காடு ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

மாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை மொறிசியஸ் கிளையினர் செய்துவருவதுடன் சகல நாட்டிலும் உள்ள கிளையினருக்கு அழைப்பிதழ்களை அனுப்பியுள்ளனர்.

இந்த அழைப்பின் பிரகாரம் இலங்கைக் கிளை மேற்படி மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு நிதி சேகரிப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்துவருகிறது.

இம்மாநாட்டிற்குச் சென்று இலவசமாகக் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை நடாத்த விரும்புபவர்களும், சொந்தச் செலவில் மாநாட்டிற்கு செல்ல விரும்புபவர்களும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச்செயலாளர் திரு. இரா. கனகரத்தினம், குரும்பசிட்டி, தெல்லிப்பளை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(வேலணை-[illegible])

இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழியல் மன்றத்தின் சார்பில் 'தோட்டக் காட்டினிலே' சிறு கதைத் தொகுதி, இன்று பிற்பகல் யாழ். பல்கலைக் கழக கலைமண்டப 3ம் இலக்க அறையில், விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. [ஈ]

காசி, மாவை தம்பதிகளுக்கு வரவேற்பு

(மட்டக்களப்பு)

கவிஞர் காசி ஆனந்தன் தம்பதிகளுக்கும் மாவை சேனாதிராசா தம்பதிகளுக்கும் இம்மாதம் 8-ம் திகதி மாலை மட்டக்களப்பில் பொது வரவேற்பளிக்கப்படவுள்ளது.

செல்வநாயகம்ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் இவ்வரவேற்புக்கு, மட்டக்களப்பு இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வாசுதேவா தலைமைவகிப்பார். (கெ)

கேகாலை மாணவர்

வல்லிபுர ஆலயத்துக்கும் விஜயம் செய்வர்

(நெல்லியடி)

விடுதலை பாசறைக்காக கேகாலை மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும் ஆசிரியர்களும், மாணவர்களும் இம்மாதம் 9-ம் திகதி வரலாற்றுப் பெருமை மிக்க பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கும் விஜயம் செய்வார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவு -- கச்சதீவு படகு சேவை கூ. சங்கம் நடத்தும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய போக்குவரத்துவசதிகளை நெடுந்தீவு பொதுச்சேவை கூட்டுறவுச் சங்கம் துரிதமாக செய்து வருகிறது.

சங்கத்தின் படகை சேவையில் ஈடுபடுத்த சங்கம் தீர்மானித்துள்ளது. ஒரே தடவையில் 100 பிரயாணிகளை ஏற்றிச்செல்ல வசதிகளைக் கொண்ட சங்கத்தின் சமுத்திர [illegible] என்ற [illegible] இதற்குப் பயன்படுத்தப்படும். நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குக் கட்டணமாக யாத்திரிகர் ஒருவருக்கு 25 ரூபா அறவிடப்படவிருப்பதாக சங்கத்தலைவர் திரு. தா.இலட்சுமணராசா கூறினார். அவர் மேலும் கூறியதாவது.

நெடுந்தீவைச் சேர்ந்த யாத்திரிகர்களுடன் வெளியிடங்களில் இருந்து நெடுந்தீவுக்கு வந்து அங்கிருந்து தமது யாத்திரையைத் தொடரவிருக்கும் சகல யாத்திரிகர்களினதும் போக்குவரத்துவசதிகளை நல்லமுறையில் செய்து கொடுப்பதே பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கமாகும். (ஈ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

5 லட்சம் ரூபா செலவில்

கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம்

அரச அதிபர் அடிக்கல் நாட்டினார்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டையில் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கான அடிக்கல்லை யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி நாட்டி வைத்தார்.

இவ்வைபவத்தில் யாழ். செயலக உயர் அதிகாரிகள், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குஞ்சு உற்பத்தியகம். அலுவலகம், உத்தியோகத்தர் தங்குமனை, களஞ்சியச்சாலை ஆகியவற்றை உள்ளடக்கி அமையும் இப்பாரிய திட்டம் நாலரை ஏக்கர் காணியில் அமையவுள்ளது

1 மாதத்தில் 12,500 ஒரு நாள் குஞ்சுகளை இந்த உற்பத்தியகம் முட்டைகள் மூலம் தயாரிக்க முடியும். அத்தோடு இருமாத காலத்தின் பின் இறைச்சி தயாரிக்கக் கூடிய விதத்தில் நாளாந்தம் 200 கோழிகளையும் இவ்வுற்பதியகம் தயாரிக்கும்.

கோழி உணவு தயாரிக்கும் அளவைப் பொறுத்து இத்திட்டம் மேலும் விரிவாக்கம் பெற முடியும். இந்தத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை மிகக்குறுகிய காலத்தில், கூடிய நன்மைகளை மக்களுக்கு வழங்கக் கூடிய விதத்தில் செயல்பாடு அடைய முடிகிறது.

மே மாதம் முதல் வாரத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிம் இத்திட்டத்திற்கான கட்டிடம் அமையும், யாழ் மாவட்டத்தில், இதற்கு முன் இல்லாத வகையில் விரைவாக அமையவுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (கொ)

இரு பெண்களுக்கு அபராதம்

(புலோலி]

கோவில் முன்றலில் சண்டை செய்து அமைதிக்குப் பங்கம் விளைவித்த இருபெண்களுக்குத் தலா 30 ரூபா அபராதம் அல்லது இரண்டுவாரச் சிறைத் தண்டனை விதித்து பருத்தித்துறை நீதவான் திரு. சே. ஞானச்சந்திரன் தீர்ப்பளித்தார்.

சின்னத்தம்பி இராசம்மா, ஆறுமுகம் நல்லம்மா ஆகிய இருபெண்களுமே கோவில்முன்றலில் நின்று சண்டைசெய்து அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்கள் என்று குற்றம்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கில் இருபெண்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 30 ரூபா அபராதம் விதித்த நீதவான் அபராதப்பணத்தைச் செலுத்தத் தவறினால் இரு வாரம் மறியல் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிட்டார். [அ]

பொருட்காட்சி இன்று

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரக் கல்லூரி ஒன்றிணை கல்விப் பொருட்காட்சி இன்று கல்லூரியில் அதிபர் செல்வி.ஏ ஜே.மான் தலைமையில் நடைபெறுகிறது

வட்டாரக் கல்வி அதிகாரி திரு,நா. துரைச்சாமி மங்கள விளக்கேற்றி வைக்க பருத்தித்துறை எம்,பி,திரு கே.துரைரத்தினம் பொருட்காட்சியைத் திறந்து வைப்பார். [இ[

வேணுகோபால் மரணம் கொலைஎனத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தாக்குதலுக்குப் பலியான யாழ்.கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த வேணுகோபாலன் மரணம் தொடர்பாகமரண விசாரணை நடத்திய யாழ். மேலதிகநீதவான் ருதி'கே.எஸ் மகேசன் கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சந்தேக நபர்களான மயில்வாகனம் பாலசுந்தரம், து.குணசேகரம்' து .அம்புஜம் ஆகியோரைறிமாண்டில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் பொல்லாலும் அலவாங்காலும் வேணுகோபாலை தாக்கினார்கள் என்று மனைவி குணமணி செய்த புகாரை தொடர்ந்து பொலிசார் விசாரணை நடத்தினர்.

'காயமடைந்த வேணுகோபால் யாழ் ,ஆஸ்பத்திரியில் ஜனவரி 2ல் அனுமதிக்கப்பட்டு அங்கு பெப்ரவரி 10ம் திகதி மரணமானதைத் தொடர்ந்து மரண விசாரணை நடைபெற்றது.

விசாரணை முடிவில் யாழ், மேலதிக நீதவான் கே.எஸ். மகேசன் கொலை எனத் தீர்ப்பளித்து சந்தேகநபர்களை இம்மாதம் 10ம் தேதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

யாழ். நகர்க் கொள்ளை

ஐவரும் அடையாளம் காட்டப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட 5 சந்தேக நபர்களையும் றிமாண்டில் வைக்க யாழ். மேலதிக நீதவான் திரு.கே. எஸ். மகேசன் கட்டளையிட்டார்.

யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு. அமிர்தலிங்கம் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

யாழ். பிரதான வீதியில் வைத்து காரைத்தடுத்து நிறுத்தி அதில் பிரயாணம் செய்த மூகாந்து முனுப் என்பவருக்குரிய 970 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும் சங்கிலியையும் கொள்ளையடித்தது தொடர்பாக இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான அன்ரன் மெல்தால், ராஜகுமார், இம்மனுவல், அந்தோனிப்பிள்ளை, பிலிப் ஆகிய ஐந்துபேரும் அடையாள அணிவகுப்பில் இடம் பெற்றனர்.

ஐந்துபேரையும் சாட்சியொருவர் அடையாளம் காட்டியதைத்தொடர்ந்து சந்தேக நபர்கள் யாழ் மேலதிக நீதவான் திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டனர். (க)

பரு.கடற்கரையில்

மாமாங்க தீர்த்தோற்சவம்

(புலோலி)

மாமாங்கம் என வழங்கும் மாசி மகா மகத்தினமாகிய கடந்த சனிக்கிழமை பருத்தித்துறைக் கடற்கரையில் விசேடமான முறையில் தீர்த்தோற்சவங்கள் நடைபெற்றன.

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோவில் கொட்டடிச் சித்தி விநாயகராலயம், ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் ஆகிய கோவில்களிலிருந்து சுப்பர்மடக் கடற்கரைக்கு மூர்த்திகள் எழுந்தருளி தீர்த்தமாடின.

பன்னைக்கட்டைப் பிள்ளையார் கோவில் புற்றளைப் பிள்ளையார் கோவில், சிவன்கோவில் மருதடிப் பிள்ளையார் கோவில் தெணிபிள்ளையார் கோவில். மாதனை காளிகோவில் ஆகிய கோவில்களிலிருந்து பருத்தித்துறைக் கடற்கரைக்கு மூர்த்திகள் எழுந்தருளி தீர்த்தமாடின.

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திலிருந்து கற்கோவளம் கடற்கரைக்கு எழுந்தருளிய மூர்த்தி தீர்த்தோற்சவம் முடிவுற்றதும் கற்கோவளம், வராத்துப்பளை ஊடாக சந்நிதானத்தைச் சென்றடைந்தது.

'ஈழநாடு' கரபந்தாட்டப் போட்டி முடிவு திகதி 10

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலையம் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்திற்காக நடாத்தவிருக்கும் மின்னொளி கரபந்தாட்டச்சுற்றுப்போட்டி ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகிதமிழ்-சிங்கள புதுவருடதினத்தன்று இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இடம் பெறும்.

ஓவர்-கேம் 6 வீரர்போட்டி ஓவர் கேம் 4 வீரர் போட்டி செற்-அப் என 3 பிரிவுகளாக இடம் பெறும் இப்போட்டிகளுக்கானவிண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 10ம் திகதியாகும்.4 3-1980 ஈழநாடு இதழில் இம்மாதம் 26ம் திகதி என்றிருப்பதுதவறாகும்.

பங்கு பற்றவிரும்பும் கழகங்கள்.நிலையங்கள் செயலாளர் ஞான வைரவர் சனசமூக நிலையம் வயாவிளான் என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

யோகேஸ்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியு உரிமைப்பிரச்னை ஒன்றைக் கிளப்பி எதிர்க்கட்சித் கட்சித்தலைவர் நேற்றுமுன் தினம் சபையில் பேசும்போது கூச்சல் எழுந்த சமயம், ஒன்றும் புரியாதபடிப்பறிவில்லாதவர்கள் என்று அங்கத்தவர்களைக் குறிப்பிட்டுள்ளார் என்றும் இது சபை உறுப்பினர்களை அவமதிப்பதாகுமென்றுங் குறிப்பிட்டார்.

இப்பிரச்னையை சபாநாயகரின் தீர்ப்புக்கு விடுவதாக தலைமை வகித்த பிரதி சபாநாயகர் தெரிவித்தார். [ம]

'தமிழர் உலகசாதனை புரிய முன்னோடி ஆழிக்குமரன்'

(யாழ்ப்பாணம்)

உலகசாதனை வீரர்கள் பட்டியலில் தமிழர்கள் இடம் பெற முன்னோடியாக விளங்கியவர் ஆழிக்குமரன் ஆனந்தன் என்று யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆழிக்குமரன் ஆனந்தனுடன் ஒரு மாலைப் பொழுது கலைநிகழ்ச்சியில உரை நிகழ்த்திய யாழ. நகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் கூறினார்

திரு. விஸ்வநாதன் மேலும் கூறியதாவது நீண்டநடை, நீண்டநேர டுவிஸ்ட் நீண்நேர சைக்கில் ஓட்டம் இப்படியாக பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியவர் ஆழிக்குமரன்.

''இவரைப்பின்பற்றி யாழ்ப்பாணத்திலும் சாதனை வீரர்களின் பட்டியல் தொடர்ந்தன நீண்டநேரம் டுவிஸ்ட், ஒற்றைகாலில் நிற்பது நீண்டதூரம் பின்நோக்கி சயிக்கிள் ஓட்டம் போன்ற சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

உலக அரங்கில் தமிழனின் புகழை உயர்த்திய வீரர்கள் பட்டியலில் அதிகரித்துவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்றார். (க)

திருட்டு நகைகள் வைத்திருந்தாராம்

எதிரிக்கு ரூ. 5000 உறுதிப்பிணை

(மானிப்பாய்)

திருட்டு நகைகளை வைத்திருந்ததாக ஒருவர்மீது தொடரப்பட்ட வழக்கில் அவரை 5000 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்த மல்லாகம் நீதிபதி வழக்கை விசாரணை செய்வதற்காக இம்மாதம் 18ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த வீடொன்றிலிருந்து திருடப்பட்ட 60 ஆயிரத்து 471 ரூபா பெறுமதியான நகைகளைத் தமது கடையில் வைத்திருந்ததாகத் திருகோணமலையைச் சேர்ந்தவரான நகைக் கடைக்காரர் ஒருவர்மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தனர்.

எதிரி சார்பில் சட்டத்தரணிகள் ஜிம்மி இராஜரத்தினம், எஸ். சிவானந்தன் ஆகியோர் ஆஜராகி எதிரியின் கடையிலிருந்த நகைகளைப் பொலிசார் திருட்டு நகைகள் என்று கூறி கைப்பற்றிவிட்டதாகவும், அது எதிரியினுடைய நகைகள் என்றும் அதை அவரிடமே கொடுக்கவேண்டுமெனவும் வாதிட்டனர்.

வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் இதனை ஆட்சேபித்தார். மேற்படி திருடப்பட்ட நகைகள் 1-8-79 ல் இருந்து 8-2-80 வரை இக்கடையில் விற்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடையிலிருந்து மேற்படி நகைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டியையும், நகையொன்றிலிருந்த படம் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து நகைக்கடைக்காரரை 5000 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 18ம் திகதி வழக்கை விசாரணை செய்வதாக நீதிபதி திரு. எஸ். இராஜசிங்கம் தெரிவித்தார்.

நகைக் கடைக்காரர் சார்பில் சட்டத்தரணிகள்: ஜிம்மி இராஜரத்தினம், எஸ். சவானந்தன் ஆகியோரும் வழக்காளிதரப்பில் சட்டத்தரணிகள்; ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி யோகாந்தி செல்வரத்தினம் ஆகியோரும் ஆஜராகினர்.

முதற் பரிசு பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

சங்கீத ஆசிரியர் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பேச்சு நாடகப் யின் ஆரம்ப பிரிவில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் அஜந்தா இராஜநாயகம் முதலாவது பரிசைப் பெற்றுக் கொண்டார்.

அஜந்தா இராஜநாயகம்

இதே போட்டியின் 3ம் பிரிவில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. சஞ்சுதா குமாரதாஸ் முதலாம் பரிசைப் பெற்றார்

இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த செல்வி. எஸ். ராஜகுலேந்திரனின் மாணவர்களாவர்.

றவுக்கைச் சந்தை மலகூடம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் றவுக்கைச் சந்தையிலுள்ள மலசலகூடம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. சந்தையில் வியாபாரம் செய்ய வருவோரும், பொருட்களை வாங்கவருவோரும் இம்மலசலகூடத்தையே பாவிக்கின்றனர். ஆனால் மானிப்பாய்ப்பட்டினசபையோ சுகாதாரப்பகுதியோ இம்மலசலகூடத்தைக் கவனிக்காது அதுசுகாதாரத்துக்குப் புறம்பான நிலையில் இருப்பதாக பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இம்மலசலகூடத்திலிருந்து எழும் துர்நாற்றத்தால் மக்கள் சந்தைப்பக்கமே செல்ல முடியாதிருப்பதாகவும், மலசலகூடம் உடனுக்குடன் துப்புரவு செய்யப்படாததால் தாம் பெரிதும் கஷ்டமடைந்துவருவதாகவும் மக்கள்கவலை தெரிவிக்கின்றனர். (கொ-அ)

வல்லிபுர...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய தினம் நடைபெறவுள்ள விசேஷ பூசையில் கலந்துகொள்ளும் இவர்களுக்கு, கோப்பாய் - உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரிகள் ஒன்றிணைந்து மதியபோசனம் வழங்கி கௌரவிக்கவுள்ளார்கள். (சு)

ஆப்கான் நெருக்கடி

இந்தியக் கொள்கைக்கு அமெரிக்கா, ரஷ்யா பாராட்டு

இந்திராகாந்தி பெருமிதம்

புதுடில்லி, மார்ச் 5 ஆப்கானிஸ்தான் நெருக்கடி காரணமாக ஒன்றை ஒன்று மோதிப் பெரும் போர்ஒன்றை நடத்தும் நிலையில் இருந்த அமெரிக்காவும் ரஷ்யாவும ஆப்கான் விவகாரம் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கைகளை இப்போது வரவேற்கின்றன.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

உத்தம்பூரில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். திருமதி காந்தி மேலும் கூறியதாவது:

ஆப்கானிஸ்தான் நெருக்கடியை அடுத்து பாகிஸ்தானில் ஒரு படைத்தளத்தை அமைக்கும் நோக்குடனே பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விநியோகிக்க அமெரிக்கா முன்வந்தது. அமெரிக்காவின் இப்போக்கு பிரச்னையை மேலும் சிக்கலாக்கிவிட்டது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கினுல் இந்திய துணைக்கண்டத்தின்பொருளாதார வளர்ச்சிக்கு இது தீங்கு விளைவிக்கும்.

ஆப்கான் நெருக்கடி குறித்த இந்தியாவின் நிலை வல்லரசுகளின் கடுமையான மனப்போக்கைத் தணிக்க உதவின என்றும் திருமதி காந்தி கூறினுர். (இ)

முகாபே அரசுக்கு பாராட்டு

லண்டன், மார்ச் 5 90 ஆண்டுகால சிறுபான்மை வெள்ளையர் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவரும் ருெடீஷிய பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஆபிரிக்க தேசிய வாத முன்னணித் தலைவர் திரு. ருெபேர்ட் முகாபேக்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா உட்பட பல உலகநாடுகள் பாராட்டுத்தெரிவித்துள்ளன. (இ)

3958 பக்கங்களில் நாவல்

கொச்சி, மார்ச் 5 3958 பக்கங்களைக்கொண்ட மலையாள மொழியிலான நாவல் ஒன்று கொச்சியில் வெளியிடப்பட்டுள்ளது.

270 ரூபா விலைகுறிக்கப்பட்ட இந்த நாவலை 52 வயதான பத்திரிகையாளர் திரு. மேனன் 'விலாசினி' என்ற பெயரில் எழுதியுள்ளார்.

ஏற்கனவே இவர் எழுதியுள்ள 5 நாவல்களில் 2 நாவல் சாகித்திய மண்டல விருது பெற்றவை என்பது குறிடபிடத்தக்கது. [இ]

சென்னை எதிர்க்கட்சிகள் பேரணியில் வன்முறை

"நீதி விசாரணை வேண்டும்" எதிர்க்கட்சிகள் கோரிக்கை

சென்னை, மார்ச் 5 "தமிழக் அரசை மத்திய அரசு [illegible]த்ததை எதிர்த்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னையில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஊர்வலத்தில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நீதிவிசாரணை நடத்தவேண்டும்."

இவ்வாறு அ தி மு க, ஜனதா, லோக்தள் உட்பட்ட 14 எதிர்க்கட்சிகள் தமிழக கவர்னர் திரு, பிரபுதாஸ் பட்வாரியிடம் கோரிக்கை விடுத்தன.

இக்கோரிக்கைதொடர்பான மகஜர் ஒன்றும் கவர்னரிடம் சமர்ப்பிக்கப்பட்டது,

அமைதியான முறையில் எதிர்க்கட்சிகள் நடத்தியஊர்வலத்தின்போது சமூகவிரோத சக்திகளும் பொலிசாரும் வேண்டுமென்றே திட்டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். இதுகுறித்து உடன் நீதிவிசாரணை நடத்தவேண்டும் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னுள் தமிழக முதல்வர் திரு, எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் ஞாயிறன்று நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் இடம்பெற்ற வன்முறைகளினுல் 500 பேர் காயமடைந்தது தெரிந்ததே. (இ)

வெங்காயம் கொள்வளவு

(பண்டத்தரிப்பு) பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

தரமான பிடி வெங்காயத்தை அந்தர் ஒன்றுக்கு 225 ரூபா வீதம் விவசாயிகளிடமிருந்து சங்கம் கொள்வனவு செய்யவிருப்பதாக, இதுபற்றி தகவல் தருகையில் சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. இராசசுந்தரம் தெரிவித்தார். (கு)

சர்வதேச ஆணைக்குழு

பணயக் கைதிகளைப் பார்வையிடுவதில் இழுபறி

தெஹ்ரான், மார்ச் 5 ஈரானிய தூதரகத்தில் உள்ள அமெரிக்க பணயக் கைதிகளைப் பார்வையிடுவதற்கு ஷாவின் நடவடிக்கைகள் குறித்து விசாரணைசெய்து வரும் சர்வதேச ஆணைக் குழுவை அனுமதிப்பதில் தொடர்ந்தும் இழுபறி இருந்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பணயக்கைதிகளைப் பார்வையிட ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குவதென ஈரானிய புரட்சிச் சபையும் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியும் முடிவுசெய்துள்ள போதிலும் பணயக்கைதிகளை வைத்திருக்கும் தீவிரவாத மாணவர்கள் இதற்குசிலநிபந்தனைகளைவிதித்துள்ளனர்.

ஏற்கமுடியாத பல நிபந்தனைகளை மாணவர்கள் விதித்துள்ளமையினுலேயே இந்த இழுபறி நீடிக்கிறது என ஈரான் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

அதிமுகஆட்சியில் முறைகேடுகள்

உடன் சீர்செய்யக்கோருகிருர் இளையபெருமாள்

சென்னை, மார்ச் 5 "தமிழ்நாட்டில் அ தி மு க ஆட்சியின்போது இடம்பெற்ற சில முறைகேடுகளை உடனடியாக சீர்படுத்த நடவடிக்கை எடுங்கள்."

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. இளையபெருமாள் தமிழக கவர்னரைக் கேட்டுள்ளார்.

'ஓட்டோ ரிக்ஷோ பர்மிட் விநியோகம், மின்சார கூட்டுத்தாபன நிர்வாகம் ஆகியவற்றிலேயே சில முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (இ)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க: பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

4 CYCLE
BRIGGS & STRATTON

ஹேலிஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம்!
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்!

டாஷ்கந்த்பட விழா

மே மாதம் நடைபெறும்

டாஷ்கன்ட், மார்ச் 5 ஆசிய, அபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளின் 6வது சர்வதேசப் படவிழா, டாஷ்கன்டில் மேமாதம் 20ம் திகதி முதல் 30ம் திகதி வரை நடைபெறும்,

"சமாதானத்திற்காக, சமுதாய முன்னேற்றத்திற்காக, நாடுகளின் சுதந்திரத்திற்காக' என்பது இவ்விழாவின் குறிக்கோளாகும் என்று பத்திரிகையாளர் மாநாட்டின் விழாவின் போது இயக்குநர் ஏ. அப்துல்லாயேன் அறிவித்தார்.

100க்கு மேற்பட்ட நாடுகளின்படத் தயாரிப்பாளர்கள் இவ்விழாவில் கலந்துகொள்வர்.

டாஷ்கன்ட் படவிழாவின் போது 'சமாதானம்,சமுதாய முன்னேற்றம், நாடுகளின் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் சினிமாவின் பங்கு' என்னும் பொருள் குறித்து தொழில்முறையில் ஒரு விவாதம்நடைபெறும். உஸ்பெக்கிஸ்தான் குடியரசின் உழைப்பாளி மக்களையும் படத் தயாரிப்பாளர்கள் சந்திப்பர். (இ)

அல்வாய் கொலைவழக்கு:

குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிக்கு 2 வருடச் சிறை

(புலோலி) அல்வாய் கொள்ளை வழக்கில் எதிரிக்கு, பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

இவ்வழக்கில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த திருமதி. பத்மாவதி கணபதிப்பிள்ளையின் வீட்டில் 39,050 ரூபா பெறுமதியான தங்க நகைகளை கொள்ளையடித்ததாக மகேஸ்வரன் என்ற இளைஞர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நகைகள் யாழ்ப்பாணத்திலுள்ள நகைக்கடையொன்றில் விற்று உருக்கிய நிலையில் பொலிசாரால் மீட்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து 2வருடக் கடூழியச் சிறைத்

(7-ம் பக்கம் பார்க்க)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜீ ... கே. ஆர். விஜயா
செல்வம்

வின்ஸர் 2வது ஜனத்திரள் வாரம்!
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9
நாகேஷ்–முத்துராமன்–ஜெயந்தி–சௌகார் ஜானகி
சுந்தரராஜன் நடித்த
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
இயக்குநர் திலகம் K பாலசந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு. நீண்டகால இடைவெளியின்பின் யாழ். நகரில் திரையிடப்படும் தரமான ஒப்பற்ற காவியம். நாகேஷின் நடிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கண்டு களியுங்கள்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) **SANJEER**

லிடோ தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
கணவன்

REGAL 2nd Crowded Week
JAFFNA. Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இளம் நாடகக் குழுவில் தொடர்ந்து பல கொலைகள் நடக்கத் தொடங்குவதன் மர்மத்தைக் காண இன்றே விரையுங்கள்.
திகில் – காதல் – மர்மம் நிறைந்தது
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டும்)
LOVE SEX TOGETHER WITH MURDERS AND THRILL - STRICTLY FOR ADULTS

SANTHI JAFFNA Phone: 7642
DAILY 10-30,a.m 2-30, 4-45, 7-00 & 9-30 P.M.
A Hilarious Action Comedy
Treat For The Entire Family...
Exciting...Fantastic...Thrilling...Enjoyable
Much Better than 'CRIME BUSTERS'
BUD SPENCER...TERENCE HILL
WATCH OUT WE'RE MAD!-COLOR

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்–சரோஜாதேவி–எம்.ஆர். ராதா
பாலாஜி–ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

ஸ்ரீதர் -யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
கமலஹாசன், சிறீதேவி, ரஜனிகாந்த்
Y விஜயா நடித்த
மூன்று முடிச்சு (புதிய பிரதி)
இரண்டு நாட்கள் மட்டும்

From 8—3—80
THE DON IS DEAD

விமர்சன அரங்கு

(நெல்லியடி)

"தோட்டக் காட்டினிலே" விமர்சன அரங்கு இம்மாதம் 9ம் திகதி ஞாயிறு பிற்பகல் நெல்லியடி சன்மார்க்க பாலர் பாடசாலையில் இடம் பெற இருக்கிறது.

இன்றைய பலன்

மாசிமாதம் 23ம் திகதி
6-3-1980 வியாழக்கிழமை

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

மேடம்: அன்பர்களின் வருகை உற்சாகத்தையளிக்கும், குடும்பவாழ்க்கையிலும் தென்றல் வீசும். காதலர்களுக்கும் கனிவான தினம்.

இடபம்: வாகனம்செலுத்துவோர் அவதானம் வேண்டும். செலவினங்களைக் கட்டுப்படுத்தவும். தொழில் துறையிலும் தொல்லைகள் உருவாகலாம்.

மிதுனம். பாக்கியவிருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும், தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும் தொழிலிலும் தொல்லை நீங்கும்.

கடகம்: சிலர் வாழ்க்கையில் திடீர் இடமாற்றத்திற்கு இடமுண்டு. வாகனச் சாரதிகள் ஆதாயம் பெருகும். தொழிலும் சீர் பெறும்.

சிங்கம்: எதிர்பாராத இடத்திலிருந்து அதிர்ஷ்டலாபமும் கிடைக்கும் கல்வியில் உற்சாகம் பிறக்கும். சகோதர சந்தோஷமு உண்டு.

கன்னி: சிக்கல்கள் சிலந்தி வலைபின்னும். தற்பெருமையின்மூலம் பணம் பறிபோவதற்கு இடமுண்டு. பூமிப் பிணக்குக்குமிடமுண்டு. உடற் சுகாதாரம் வேண்டும்.

துலாம்: செலவுகளைக் கட்டுப்படுத்தவும். குடும்ப விவகாரமும் தலைதூக்கலாம். தொழிலிலும் பொறுமை வேண்டும். உஷாராக இருக்கவும்.

விருச்சிகம்: பொருள் வரவும் உண்டு. பொதுமக்கள் ஆதரவுண்டு. மனம்போல் வாழ்வுமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

தனுசு: குறுக்கு வழித் தலையீடு வேதனை தரலாம். எதிலும் ஏமாற்றம் தென்படும். குடும்பப் பிணியும் தலைதூக்கும்.

மகரம்: லாபகரமான தொழிலில் முதலீடு செய்வதற்கு உகந்த தினம். வாகனச் சிறப்புமுண்டு. வருமான விருத்தியுண்டு. வளமான வாழ்வுமுண்டு.

கும்பம்: இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்தில் இனிமை தங்கும். புத்திரசுகமுண்டு. பொன்னான தினம்.

மீனம்: வழக்கு விவகாரமும் தலை தூக்கலாம். சஞ்சல மிகுதியுண்டு. திடீர்ப்பயணமும் ஏற்படலாம். துக்க தினம்.

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - A. V. ராஜன்
மனிதரில் மாணிக்கம்
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
வீரக்கனல்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 4-45, 7-00
& 9-30
HORSE MAN

சென். ஜோன்ஸுக்கு இன்னிங்ஸ் வெற்றி

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்குமிடையில், பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி இனிங்சாலும் 9 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலில் ஆடிய [illegible] பரி. யோவான் கல்லூரி 8 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 245 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஈ. யே ஜெபரத்தினம், யே. கிறிதந்தகுமார், ஈ. தஞ்சரத்தினம் ஆகியோர் முறையே 46, 41, 32 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ். சிவநாயகம் வெளியேறுமலே 30 ஓட்டங்களைப் பெற்றார். ரி. தயாளன் 77 ஓட்டங்களைக் கொடுத்த 4 விக்கட்டுகளையும் செல்வன் ராஜசிறி 76 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி சகல விக்கட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. ஏ. இராசேந்திரா வெளியேறுமலே 52 ஓட்டங்களைப் பெற்றார். ஈ.யே. ஜெபரத்தினம் 18 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

இரண்டாவது முறையாகவும் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி எல்லா விக்கட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. ஏ.இராசேந்திரா 22 ஓட்டங்களையும் செல்வன் ரி.தயாளன் வெளியேறுமலே 27 ஓட்டங்களையும் பெற்றனர். எஸ். கருணகுமார் 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

"தொகுதி நிர்ணயக்கமிஷன்

சிறுபான்மையினரை சிறப்பாகக் கவனிக்கவில்லை"

குமார் பொன்னம்பலம் சாட்சியம்

[கொழும்பு]

"முன்னைய தொகுதி நிர்ணயக்குழு சிறுபான்மையினரை சிறப்பாகக் கவனித்தது ஆனால் இந்தமுறை இப்போது இல்லை"

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு.குமார் பொன்னம்பலம் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

ஆணைக்குழு விசாரணைகள் நேற்றுக் காலை கொழும்பு நூதனசாலை மண்டபத்தில் ஆரம்பமாகியபோது தமிழ்க் காங்கிரஸ் தூதுக்குழுவினர் சாட்சியமளித்தனர்.

திரு. குமார் பொன்னம்பலம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் "தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ் மக்களின் நலனைக் கவனிக்க பாராளுமன்றம் செல்லவில்லை. கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய கட்டளையை பிரச்சாரம்செய்ய மேடையாகவே பாராளுமன்றத்தை பாவித்து வருகின்றனர்" என்றார்.

முன்னாள் மூதவை உறுப்பினர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், ஜிம்மி ராஜரத்தினம், ஆர். என். சிவப்பிரகாசம் உட்பட பலர் சாட்சியமளித்தனர். [ம-கு]

குற்றத்தை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை விதிக்கப்பட்டது

இக்கொள்ளை தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சந்திரா குணரத்தின, கான்ஸ்டபிள்களான திரு உவைஸ், திரு. மரியநாயகம் ஆகியோர் புலன் விசாரணை நடத்தி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர். (க)

அலங்கார உற்சவம்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு பாரத்தை ஐயனார் ஆலய வருடாந்த அலங்காரஉற்சவம் இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் 30ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

30ம் திகதி இரவு ஐயனார் ஊர்சுற்றுளா பவனியும்.31ம் திகதி குளிர்த்தி உற்சவமும் நடைபெறவுள்ளன. (க)

பிஸ்கால் ஏலவிற்பனவு விளம்பரம்

மாவட்ட மன்று மல்லாகம்

வழ. இல: எம். எஸ்/ 2828
1. சரவணமுத்து இராசாவும்
2. பெண் சிவநேசம், சுன்னாகம். வழக்காளி

எதிராக

ஈக்கிள் அக்குரோ இன்சினியரிங் இன்டஸ்றிஸ்,
டிவலப்மென் கொம்பனி லிமிற்றட்,
மனேச்சிங் டிறக்டர் ஜே எஸ். உயிரமுத்து,
பிரதான வீதி, காங்கேசன்துறை.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழ. இல: எம். எஸ்/ 2828 ல் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனத்தை 1980ம் ஆண்டு சித்திரை மாதம் 23ந் திகதி பிற்பகல் 1-00 மணி தொடக்கம் அந்தக் காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

(1) தீர்வைத் தொகை ரூபா 15265/-ம் மேலும் முதல் ரூபா 15,000/-க்கு 5- 1- 79 தொடக்கம் 10-5-79 வரைக்கும் 18 வீத வட்டியும் அதன் பின்னர் தீர்வை தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

மூ. நல்லலிங்கம்,
பிஸ்கால்.

1980ம் ஆண்டு பங்குனி மாதம் 4ந் திகதி

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று பளை இறை புதுமணற்காடு நிலப்பரப்பு பதினேழு இருபத்திநாலில் பதினைந்து குளி 16 15/24 கட்டிடமும் எல்லை கிழக்கு ஞானேஸ்வரியினுதனம், வடக்கு றேட்டு, மேற்கு சின்னத்தம்பி ஜெகராசசிங்கத்தினுதம், தெற்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் சேதுப்பிள்ளையினுதினம் இடங்களும்.

5148

இன்று கச்சதீவு யாத்திரை ஆரம்பம்:

கச்சேரி, பொலிஸ், சுங்க அதிகாரிகள் புறப்பட்டனர்

வழமைபோல் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜரூர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுசனத்தொடர்பு அதிகாரி திரு. எஸ் சண்முகசுந்தரம் தலைமையில், கச்சேரி ஊழியர்களும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ். சேனாதிராசா தலைமையில் எழுபதிற்குமேற்பட்ட பொலிஸாரும், சுங்க இலாகா உத்தியோகத்தர் திரு. அன்சலம் தலைமையில், 6 சுங்க உத்தியோகத்தர்களையும் கொண்ட கோஷ்டியொன்று, கச்சதீவில் கடமையாற்றுவதற்காக, நேற்றுக்காலை குறிக்கட்டுவானிலிருந்து படகு மூலம் சென்றுள்ளது.

கச்சதீவில் இம்முறை அமைக்கப்படும் தற்காலிக பொலிஸ் நிலையம். சகல வசதிகளும் பாதுகாப்புகளும் கொண்ட பொலிஸ்நிலையமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், உத்தியோகப் பற்றற்றமுறையில் இந்தியப் பொலிஸாரும், கச்சதீவில் கடமையாற்றுவார்கள்.

படகுகள் இன்று காலை 6மணிமுதல் குறிக்கட்டுவான், நெடுந்தீவு, மயிலிட்டி, ஊர்காவற்றுறை, தலைமன்னார் ஆகியதுறைகளிலிருந்து புறப்படவிருக்கிறது. தினமும் காலை 6 மணிமுதல், நண்பகல் 1மணிவரையுமே] படகுகள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. யாத்திரிகர்கள் யாவரும் இம்மாதம் 10ம் தேதிக்குமுன் கச்சதீவிலிருந்து திரும்பிவிடவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சுற்றுநீதிமன்ற நீதவான் கச்சதீவில் வழக்குகளை விசாரணை செய்வார். சுகாதார இலாகாவினர் ஏற்கனவே தேவையான ஒழுங்குகளை செய்துள்ளனர்.

பொலிஸாருடன் இராணுவத்தினரும், கடமையாற்றுவார்களென்றும், தெரியவருகிறது.

கச்சதீவில் கடைகள் நிறுவ 200 பேர் விண்ணப்பித்திருந்தனர். 85 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடைக்காரர்கள் 1 மூடை மாவுக்கு 2 போத்தல் தேங்காய்எண்ணைமட்டும் கொண்டு செல்ல சுங்க பகுதியினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அரச ஊழியர்களுக்கான தளபாடங்களை ஏற்றிக்கொண்டு நேற்றுமுன்தினம் படகொன்று கச்சதீவு சென்றுள்ளது.

இறங்குதுறைகளில் கடமையாற்றுவதற்கு கொழும்பு சுங்கப்பகுதியிலிருந்து 10 உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கச்சதீவுக்கு யாழ்ப்பாண இறங்குதுறையிலிருந்து போகவர 150 ரூபா கட்டணமாக இம்முறை அறவிடப்படவிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் திரு. ஜெயசிங்கா யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோன், யாழ் மாாவட்ட செயலாளர் திரு. யோகேந்திரா துரைச்சாமிஆகியோர்களைக்கொண்ட கோஷ்டியொன்று செல்லவிருக்கிறது.

10,000 ரூபாவிற்கு மேற்பட்ட நகைகளை கொண்டு செல்வதற்கு ஒருபெண் மட்டும், விண்ணப்பித்திருந்தார். அவரது தாலிக்கொடி 19பவுண் நிறையுள்ளதென்பதால், பெர்மிட் வழங்கப்பட்டது.

மண்டைதீவு கடலில்நேற்று சந்தேகத்திற்கிடமானமுறையில் நடமாடிய படகொன்றை சுங்க இலாகா, சுற்றிவளைத்த போது அதில் ஒரு இந்தியர் இருக்க காணப்பட்டார். அவரை கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்து, படகை உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். (க)

தொண்டர் குழு

'கச்சதீவு உற்சவத்தில் தொண்டுபுரிவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து தொண்டர் குழு ஒன்று செல்கிறது'

கச்சதீவுஆலயத்தில் தற்போதைய மூப்பனார் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளையின் இளைய சகோதரர் திரு. ஞா. மத்தியூஸ் லங்கா பாதுகாப்புச் சேவையின் ஒரு தொண்டர் குழுவிற்குத் தலைமைதாங்கி யாழ்ப்பாணத்தில் இருந்து இக்குழுவினருடன் கச்சதீவுசெல்கிறார். மேற்படிகுழு வணபிதா பீற்றர் துரைரத்தினத்திற்கு உதவியாக, உற்சவகாலம் முடியும்வரை அங்கு தங்கிநின்று பணியாற்றும்,

தற்காலிக கட்டடங்களைப் பார்த்தனர்

(நெடுந்தீவு)

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் உற்சவத்தை முன்னிட்டு அமைக்கப்பட்ட தற்காலிக கட்டடங்களை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், கடற்படை அதிகாரியும் பார்வையிட்டனர்.

கடற்படை அதிகாரியும், பொலிஸ் அதிகாரியும் கட்டட ஒப்பந்தகாரரிடம் இருந்து கட்டடங்களைப் பொறுப்பேற்றுள்ளனர்

ஒப்பந்தகாரர் திரு. குணரத்தினத்தால் கட்டிமுடிக்கப்பட்ட கட்டடத்தில் ஒன்று இந்தியப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தகாரர்கள் இன்று முதல் கச்சதீவுக்குக் குடிநீரும் ஒளியும் வழங்கவுள்ளனர். (கொ)

கச்சதீவு உதவி அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு உதவி அரசாங்க அதிபராக திரு. சண்முகசுந்தரம் கடமையாற்றுவார்.

மூப்பரும் கோஷ்டியினரும் இம்மாதம் 2ம் திகதியே கச்சதீவுக்குச் சென்றுள்ளனர். ஏனையமதகுருமார் இன்று கச்சதீவு செல்லவுள்ளனர்.

இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய முன்றலில்உள்ள இறங்குதுறையில் விசைப்படகுகள் ஆட்களை இறக்குவதற்கும் ஏற்றுவதற்தும் மட்டுமே அனுமதிக்கப்படும். இறங்குதுறையில் விசைப்படகுகள் தரித்துநிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பிரயாணிகளின் வசதிகருதி வழமைபோல் கடற்படையினர் கடலில் ரோந்து செல்வர். இறங்குதுறைகளில் பொலிஸார் கடமையில் ஈடுபடுவர். ஒவ்வொரு இறங்குதுறைகளிலும் வழமைபோல் சுங்கப் பகுதியினரின் பரிசோதனைகளும் நடைபெறும். (கொ)

சுப்புலக்ஷ்மிகோவைசெழியன் தி. மு. க.வில் சேர்ந்தனர்

(சென்னை)

முன்னைநாள் தமிழ்நாடு அரசின் திட்டக்குழுவின் தலைவர் திரு. கோவை செழியனும், முன்னைநாள் தமிழ்நாடு கைத்தொழில் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனும், அ. தி. மு. க.விலிருந்து வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துகொண்டனர்.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி முன்னிலையிலேயே இவாகள் இருவரும் தி. மு.க. வில் சேர்ந்து கொண்டனர். (இ.

மாகோ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லும் தெரிகின்றது.

இவ்விஷயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது இச்சம்பவம்பற்றி முழுவிசாரணை நடத்தும்படி ஜனாதிபதி அதிகாரிகளை பணித்துள்ளார். அதிகாரிகள்குழுவொன்று விசாரணைக்காக மாகோவுக்குகொழும்பிலிருந்து விரைந்துள்ளது. (ம)

கைவிலங்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பென்ஸ் பெர்ணண்டோ ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை பார்க்க நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

சந்தேக நபர்களுக்கு உடன் கைவிலங்கு போடுமாறு நீதவான் உத்தரவிட்டதைத் தொடர்ந்து கோர்ட்டில் வைத்து சந்தேக நபர்களுக்கு கைவிலங்கு போடப்பட்டது.

78ம் ஆண்டு 15ம் இலக்க சட்டத்தின் முதலாம் அட்டவணையின்படி கொலைக்குற்றத்தின் சந்தேகத்தின்பேரில், இவ்விருவரையும், விளக்கம் முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், இம்மாதம் 18ம் தேதி கோர்ட்டில் ஆஜர்செய்யுமாறு உத்தரவிட்டார். (க)

யாழ்ப்பாணக் கல்வி வட்டார பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வட்டாரப் பொருட்காட்சி யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில் கடந்த இரு தினங்களாக நடைபெற்றது.

யாழ்ப்பாணவட்டாரக்கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொருட்காட்சியை யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் ஆரம்பித்துவைத்தார். சிறப்பு விருந்தினராக யாழ். பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் கலந்துகொண்டார். (கொ)

வருடாந்த விளையாட்டுப் போட்டி

(பண்டத்தரிப்பு)

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 15ம் 16ம்திகதிகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டரங்கில்நடைபெறவுள்ளது.

புளியம்பொக்கணையிலுள்ள

ஆசைநாயகிவீட்டில்'ராஜன்' தங்கியிருக்கையில் கைது

(புலோலி)

புளியம்பொக்கணையில், தமது 4 மாத கர்ப்பிணியான 4வதுஆசைநாயகிவீட்டில்படுத்திருந்தபோது பொலிசார்சுற்றிவளைத்து பலத்த போராட்டத்தின் பின் ரியுட்டரி மாணவி மரணம் தொடர்பான சந்தேக நபரான 'ராஜனை' கைதுசெய்ததாகத் தெரியவருகிறது.

பொலிசாரைக் கண்டதும், சந்தேகநபரான ராஜன் கத்தி எடுத்து தாக்கமுற்பட்டபோது பொலிசார் அவரை மடக்கிப் பிடித்தனராம்.

சந்தேக நபரினால், ஆசைநாயகிக்கு அன்பளிப்பாகவழங்கப்பட்ட ஜிப்சியை பொலிசார் ஆசைநாயயயிடமிருந்து மீட்டனர்.

சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி தலைமையில்: சார்ஜன் சண்முகசாமி, கான்ஸ்டபிள்களான உவைஸ், பெரேரா ஆகியோரைக் கொண்ட கோஷ்டியினரே சந்தேகநபரான ராஜனை மடக்கிப்பிடித்தனர்.

நண்பரும் சிக்கினர்

புளியம்பொக்கணையில் தங்கியிருந்த சந்தேக நபரான ராஜன், பருத்தித்துறை பகுதியில் உளவு பார்ப்பதற்காக அவரது நண்பன் மனோகரனை அனுப்பியிருந்ததாகவும், உளவு பார்த்த சமயம் மனோகரன் பொலிஸில் சிக்கிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

மனோகரனை பொலிசார் விசாரணை செய்தசமயம் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே சந்தேக நபரான ராஜனின் இருப்பிடத்தை பொலிசார் தெரிந்து கொண்டார்களென்றும் கூறப்படுகிறது.

மாணவியின் நகைகள்

மாணவியிடம் கொள்ளையடிக்கப்பட்ட காப்புகள், கிளிநொச்சியிலுள்ள கடை முதலாளியொருவருக்கு விற்று, சந்தேகநபர் ஆசைநாயகியின் பிள்ளைகளுக்கு உடுப்புகள் வாங்கிக் கொடுத்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறையில் வைத்து மற்றொரு சந்தேகநபரான ஜோசப் பென்ஸ் பெர்ணண்டோ கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைப்பற்றப்பட்ட கார், உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. சந்திரா குணரத்தின, சப்இன்ஸ்பெக்டர் குணரத்தின ஆகியோர்இச்சம்பவம்தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்திவருகின்றனர்.

சந்தேகநபர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்ட சமயம், அவர்களை பார்ப்பதற்கு பெருந்திரளானோர் பொலிஸ் நிலயத்தில் திரண்டிருந்தனர். (க)

யோகேஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னத்துக்குப் புதிய அழிவு சக்திகளாக வருகை தருகிறார்கள் என்றார்.

இதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாண உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

திரு. யோகேஸ்வரன் முன்னர் பேசியபோது அரசாங்கக் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கொழும்பு ஆஸ்பத்திரிகள் தொடர்பான அமைச்சர் திரு. ரஞ்சித் அத்தபத்து அமைச்சர்களின் எண்ணிக்கையை 10ஆகக் குறைக்கும்படி கூறியிருக்கிறார் என்றும் இந்த அரசு பதவிக்கு வந்தபின் உருப்படியான யோசனையொன்று இப்பொழுதுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசின் பொருளாதாரக் கொள்கையைக்கண்டித்துப் பேசுகையில் ஜயவர்த்தனபுரதிட்டம் இந்த நிலைமையில் அவசியம்தானா என்று கேட்டார். தேவையற்ற திட்டங்களில் பணத்தைக்கொட்டுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்.

கைத்தொழில் விஞ்ஞானத் துறை அமைச்சர் திரு. சிறில்

(5ம் பக்கம் பார்க்க)

மரண அறிவித்தல்

திரு. நல்லதம்பி கனகரட்னம்

ஓய்வு பெற்ற பலாங்கொடை நெடுஞ்சாலை ஓவசியர் கனகரட்னம் காலமானார். இவர் சந்திரவதியின் அன்புக் கணவரும், சாரதா, றவீந்திரன் ஆகியோரின் அருமைத் தந்தையும் திருமதி கனகம்மா தம்புவின் மருமகனும், பசளைக் கூட்டுத்தாபன இரசாயன பொறியியலாளர் ஆனந்தாவின் மாமனும், யோகரட்னம் (மொறிஸ் றோச்), ஜெயரட்னம், திருமதி அமரா இராஜவரோதயம், பாலேந்திரா (கிறீன் லேஸ் வங்கி), அச்சுதன் (U K) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைக்காக இன்று வியாழக்கிழமை (6-3- 0) பிற்பகல் 4-00 மணிக்கு 14, நல்லூர் குறுக்கு வீதியிலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

5152

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible]ாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible]கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் ௬-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the [illegible] Sri Lanka under No. QE/8943/78 The Eelanaadu P. B. No.49, Telegram Eelanadu. Phone 381